DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 118/2024**

**Deposition of Witness for Prosecution : P.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | C. சந்தானமேரி | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | சின்னப்பன் |
| ஊர் | : | பொறையார் | தாலுக்கா | : | தரங்கம்பாடி |
| ஜாதி | : | -- | வயது | : | 49 |
| மதம் | : | -- | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 24.07.2026

**எதிரி ஆஜர்**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பொறையார் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.05.2020 ஆம் தேதி வாய்மேடு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது கிடைத்த தகவலின்படி வாய்மேடு காவல் சரகம் ஆயக்காரன்புலம் பாப்புரெட்டி குத்தகை என்னுடன் பணியாற்றிய காவலர் 105 விஜயராகவன் மற்றும் 277 வீரபாண்டியன் ஆகியோர்கள் கண்காணித்து வரும் போது எங்களை கண்டதும் ஓட எத்தனித்த எதிரி அண்ணாதுரை என்பவரை பிடித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின்னாக பதில் அளித்தார். பின்னர் அவரின் வீட்டை சோதனை செய்த போது சுமார் 130 செ.மீட்டர் நீளமுள்ள சுமார் 92 செ.மீட்டர் இரும்பு பாக நீளமும், சுமார் 70 செ.மீட்டர் நீளமுள்ள இரண்டு

இரும்பு பூன் போட்ட ஒற்றை குழாய் துப்பாக்கி ஒன்றை மேற்படி காவலர்கள் முன்னிலையில் 16:15 மணிக்கு மகஜரில் கைப்பற்றி அதே சாட்சிகளின் முன்னிலையில் எதிரியிடம் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், நிலையம் வந்து எதிரியின் மீது வாய்மேடு காவல் நிலைய குற்ற எண். 557/2020 சட்டப்பிரிவு 25(1B)(a) Arms actன் படி வழக்கு பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அது **அ.சா.ஆ.3/அ.சா.5** ஆக குறியிடப்பட்டது. ஆஜர் எதிரி தான் நான் கைது செய்த நபர். என்னிடம் காட்டப்படும் துப்பாக்கி நான் எதிரியிடம் இருந்து கைப்பற்றிய துப்பாக்கி அது **அ.சா.பொ.1** ஆக குறியிடப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் துப்பாக்கி கைப்பற்ற நான் தயாரித்த கைப்பற்றுதல் மகஜர்(சாட்சியிடம் அ.சா.ஆ.2 காட்டப்பட்டது)

2. சம்பவ இடத்தில் பார்வையிட்டு வீரப்பன், பிரதீப் ஆகியோர்களின் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைப்படம் தயாரித்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.**4/**அ.சா.**5 ஆக குறியிடப்பட்டது. மாதிரி வரைப்படம் **அ.சா.ஆ.**5/**அ.சா.**5 ஆக குறியிடப்பட்டது. பின்னர் சாட்சிகள் வீரப்பாண்டியன், பிரதீப், வீரப்பன் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வழக்கின் எதிரி மற்றும் தடய சொத்தை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அ.சா.பொ.1 நீதிமன்றம் அனுப்பிய படிவம் 91 **அ.சா.ஆ.**6/**அ.சா.**5 ஆக குறியிடப்பட்டது.

3. பின்னர் வழக்கின் உதவி இயக்குநர் குற்ற வழக்கு தொடர்பு துறைஅவர்களிடம் உத்தரவு பெற்று நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் அதே

சட்டப்பிரிவு 25(1B)(a) Arms Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

4. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம். அதில் எதிரி உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கியை தன் வீட்டின் பின்புறத்தில் மண்ணில் புதைத்து வைத்து இருப்பதாகவும், அதை எடுத்து ஒப்படைப்பதாக தகவல் சொன்னார்.அதன் படி எதிரி ஆஜர் செய்த துப்பாக்கியை மகஜரில் கைப்பற்றினேன். (அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே **அ.சா.ஆ.**1/**அ.சா.**3 ஆக குறியிடப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

5. நான் தகவல் கிடைத்து போனதாக சொல்வது துப்பாக்கி இருக்கிற தகவலா என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் 16:00 மணிக்கு தகவல் கிடைத்தது. நான் சோதனைக்கு சென்ற போது என்ன என்ன பொருட்கள் எடுத்து சென்றேன் என்றால் செல்போன் மற்றும் டேப் ஆகிய பொருட்களை எடுத்து சென்றோம். நான் சென்ற இடத்தில் பொதுமக்கள் குடியிருக்கும் இடம் என்றால் வீடுகள் தூரம் தூரம் ஆக உள்ள இடம். நான் சம்பவ இடம் சென்ற போது எங்கள் வாகனத்தை கண்டு இரண்டு நபர்கள் வந்தார்கள். அவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை. பார்வை மகஜர் தயாரித்தேன். நான் சோதனை முடிந்து சுமார் 17:00 மணிக்கு புறப்பட்டு சென்றேன். காவல் நிலையம் போகும் போது யார் யாரை அழைத்து சென்றேன் என்றால் எதிரி மற்றும் துப்பாக்கி ஆகியவற்றுடன் சென்றேன். சம்பவ இடத்தில் என்னென்ன ஆவணங்கள் தயாரித்தேன் என்றால் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர். அந்த ஆவணங்களுடன்

நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை தயாரித்தேனா என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதியும் போது தான் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவு கொடுக்கப்படும் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே அடுத்த குற்ற எண் என்ன என்று கேட்டு தெரிந்து கொண்டேன்.

6. எதிரியின் மீது இந்திய ஆயுத சட்டம் பிரிவு 25(1B)(a) வழக்கு என்றால் சரிதான். அந்த குற்றப்பிரிவு ஆனது உரிமம் இல்லாமல் துப்பாக்கி பிரிவு 3க்கு முரணாக வைத்து இருந்ததாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சட்டப்பிரிவு 39ன் படி பிரிவு 3 மீறியதாக வழக்கு பதிவு செய்ய மாவட்ட நடுவரிடன் முன் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு பதிவு செய்ய அது போல் முன் அனுமதி பெறவில்லை என்றால் சரியல்ல. முன் அனுமதி பெறவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. முதல் தகவல் அறிக்கை 27.05.2020 அன்று தயாரிக்கப்பட்டு அன்றைய தினமே வேதாரண்யம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. சம்பவ இடத்திற்கு எத்தனை முறை போனேன் என்றால் இரண்டு முறை. எந்ததெந்த நாள் என்றால் அதே தினம். கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கேட்டு பதிவு செய்தேன். பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. கைவிடப்பட்ட துப்பாக்கியை கண்டு எடுத்த பின்னர் அதனை ஆவணம் படுத்த வேண்டும் என்பதற்காக அப்பாவியான எதிரியின் மீது பொய்யாக வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்போன் மற்றும் டேப் எடுத்து சென்று உள்ள போது ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் கைப்பட எழுதி தயாரித்து இருப்பேன் என்றால் சரியல்ல. பொதுமக்கள் சாட்சிகள் இருந்தும் அவர்களை சாட்சியாக அழைக்காமல் ஒப்புதல் வாக்குமூலம் தயாரித்ததாக சொல்வது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து என்னால் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை ஜோடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை நான் சொன்ன நேரத்தில் இடத்தில் கைது செய்யவில்லை என்றும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை என்றும் அவரிடம் இருந்து வழக்கு சொத்து கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதால் அது தெரிந்து விடும் என்று மாவட்ட நடுவரிடம் அனுமதி பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பொய்யாக போடப்பட்ட வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

ஒப்பம்/– C. சந்தானமேரி

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்.